தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சட்ட மன்ற மேலவையின் ஐம்பத்தி நான்காவது கூட்டத் தொடர்.

வியாழக்கிழமை, 1978 ஆகஸ்ட் 31.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் காலை 10-30 மணி அளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (திரு ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. புதிய அமைச்சர்களுக்கு வரவேற்பு

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களே, மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராசன், மாண்புமிகு திருமதி எஸ். டி. சுப்புலட்சுமி ஆகிய புதிய அமைச்சர்கள் முதன்முதலாக இந்த அவையின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

இதுவரையில் சட்ட மன்ற மேலவையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அமைச்சர்களாகப் பதவி வகிக்கிறார்கள். இந்த அவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தற்போது அதிகமான அளவில் அமைச்சர்களாக இருப்பதற்கு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் பெருந்தன்மைதான் காரணம். ஆகவே அவருக்கு இந்த அவையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அமைச்சர்களுக்கு வரவேற்பு கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

2, இரங்கற் குறிப்புகள்.

மேலவை முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் ஏ. வி. பனேஜிராவ், எம். எம். பக்கர், டி. எம். நாராயணசுவாமிப் பிள்ளை, ஜார்ஜ் கோமகன் ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவை முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் ஏ. வி. பனேஜி ராவ், எம். எம். பக்கர், டி. எம். நாராயணசுவாமிப் பிள்ளை, ஜார்ஜ் கோமகன் ஆகியோர் முறையே 26–4–1978. 3-5-1978, 23-5-1978, 14-8-1978 அன்று இயற்கையெய்தினர் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.